ஸ்ரீ ஹரி:

ஸ்ரீ ஸ்ரீ முரளீதர ஸ்வாமிஜி அவர்கள் அருளாசியுடன்

Rs.10/-

# மதுரமுரளி

தெய்வீக மாதப் பத்திரிகை



'ஹரே ராம...' மஹாமந்திர நாமகீர்த்தன கூட்டுப் பிரார்த்தனை
இடம்: டவுன் ஹால், மஞ்சக்குப்பம், கடலூர்
தேதி: நவம்பர் 3,4

ஹரே ராம ஹரே ராம ராம ராம ஹரே ஹரே
ஹரே க்ருஷ்ண ஹரே க்ருஷ்ண க்ருஷ்ண க்ருஷ்ண ஹரே ஹரே

வேணு : 13 | ஜனவரி – 2008 | கானம் : 6

www.madhuramurali.org / www.namadwaar.org

ஸ்ரீ ஹரி:





'ஹரே ராம' மஹாமந்திர நாமகீர்த்தன கூட்டுப் பிரார்த்தனை
இடம்: டவுன் ஹால், கடலூர்  தேதி: 3.11.07




ஸ்ரீமத் பாகவத ஸப்தாஹம் – அருளுரை
இடம்: கேயஸ் உயர்நிலைப் பள்ளி, செகந்திராபாத்
தேதி: நவம்பர் 11 – 18



ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்களின்
விஜயம், அருளுரை
இடம்: பாரதிய வித்யா பவன் பள்ளி,
ஜுப்லீ ஹில்ஸ், ஹைதராபாத்
தேதி: 16.11.07



ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்களின் விஜயம்
இடம்: ஆம்பூர்  தேதி: டிசம்பர் 1,2,3

# தெய்வத் தமிழ் இசை விழா, சென்னை

22.12.07 முதல் 28.12.07 வரை



நாதஸ்வரம்
திரு. M.P. பாலச்சந்தர் மற்றும்
திரு. M.P. பாலமுருகன் குழுவினர்



திருமுறை இன்னிசை
வாய்ப்பாட்டு : திரு. லக்ஷ்மண ஐயர்



திருவாசகம், திவ்யபிரபந்தம்
வாய்ப்பாட்டு : பத்மபூஷன் மதுரை
திரு.T.N. சேஷகோபாலன்



அருணகிரிநாதர் மற்றும்
அருணாசலக்கவிராயர் பாடல்கள்
வாய்ப்பாட்டு : திரு. N. விஜயசிவா



முத்துத்தாண்டவர், மாரிமுத்தாப்பிள்ளை,
கோபாலகிருஷ்ண பாரதியார் பாடல்கள்
வாய்ப்பாட்டு : டாக்டர்.R. கணேஷ்



பரதநாட்டியம்
செல்வி. ஸ்ருதி கல்யாணசுந்தரம்





வில்லுப்பாட்டு: கலைமாமணி கவிஞர் திரு. சுப்பு ஆறுமுகம் குழுவினர்

**Registered as Newspaper in India R. No. 62828 / 95**
Date of publication : 5th & 6th of Every month

| Regd. No. TN/CC (S) DN / 119 / 06-08 | Licensed to Post without prepayment WPP No. TN / CC (S) DN / 51 / 06 - 08 |
|---|---|

| வேணு : 13 | ஜனவரி – 2008 | கானம் : 6 |
|---|---|---|



தெய்வத் தமிழ் இசை விழா துவக்கம்:
திருவண்ணாமலை பகவான் யோகி ராம்சுரத்குமார் ஆஸ்ரம
நிர்வாக அறங்காவலர், ஜஸ்டிஸ் திரு. T.S. அருணாசலம்,
திரு. P.K. ஆறுமுகம், இயக்குனர், தி சென்னை சில்க் ஜுவெல்லரி மஹால்
திரு. D. தீனதயாளன், விஜய் அசோசியேட்ஸ்,
சைதன்யமஹாப்ரபு நாம பிக்ஷா கேந்திரா சார்பில் Dr. A. பாக்யநாதன்
ஸ்ரீ ஸ்ரீ முரளீதர ஸ்வாமிஜி அவர்களின் அந்தரங்க செயலாளர்
இடம்: மஹோதயா ஹால், சென்னை – 53. தேதி: 22.12.07

Published by V. Sankaran on behalf of Guruji Sri Muralidhara Swamigal Mission, New No. 2, Old No.24, Netaji Nagar, Jafferkhanpet, Chennai - 600 083 and Printed by Mrs. Kalaivani of Sri Maruthy Printers, 200 (173), Peters Road, Chennai - 600 014. Editor: S. Sridhar.

**Related Websites: www.madhuramurali.org / www.namadwaar.org**
**E mail: contact@madhuramurali.org; publications@madhuramurali.org**

NO FAME
NO NAME
NO SELF INTEREST
ONLY GOD

ஸ்ரீ ஹரி:

ஸ்ரீ ஸ்ரீ முரளீதர ஸ்வாமிஜி அவர்கள்
அருளாசியுடன்

# மதுரமுரளி

தெய்வீக மாதப் பத்திரிகை

வேணு : 13 ஜனவரி 2008 கானம் : 6

Published by
V. Sankaran
on behalf of
Guruji Sri Muralidhara
Swamigal Mission,
Chennai - 83.

*Copyright of articles published in '**MADHURAMURALI**' is reserved. No part of this Magazine may be reproduced, reprinted or utilised in any form without permission in writting from the publisher of Madhuramurali.*

**வாசகர்களுக்கு எங்கள் இதயங்கனிந்த ஆங்கிலப் புத்தாண்டு - 2008 மற்றும் பொங்கல் நல்வாழ்த்துக்கள்**

## பொருளடக்கம்

| | | | பக்கம் |
|---|---|---|---|
| 1. | சேது க்ஷேத்திர மஹிமை | ... | 2 |
| 2. | மதுரமான மஹனீயர் - 143 | ... | 5 |
| 3. | பக்தர்களின் கேள்விகளுக்கு ஸ்ரீ ஸ்வாமிஜியின் பதில்கள் | ... | 7 |
| 4. | பேச்சே கவிதையாகும் | ... | 11 |
| 5. | மனம் போல் வாழ்வு | ... | 14 |
| 6. | பாலகர்களுக்கு ஒரு கதை-115 | ... | 20 |
| 7. | மாலே மணிவண்ணா -57 | ... | 23 |
| 8. | பிருந்தாவனமும் நந்தகுமாரனும் (தொடர்ச்சி) | ... | 25 |
| 9. | ஸ்ரீ ஸ்வாமிஜியின் ஸம்பாஷணைகளிலிருந்து-141 | ... | 27 |
| 10. | செய்திகள் | ... | 29 |

ஹரே ராம ஹரே ராம
ராம ராம ஹரே ஹரே
ஹரே க்ருஷ்ண ஹரே க்ருஷ்ண
க்ருஷ்ண க்ருஷ்ண ஹரே ஹரே

ஸ்ரீ ஹரி :

# சேது க்ஷேத்திர மஹிமை

நமது பாரத நாடு மிகவும் புனிதமான நாடாகும். சப்த புண்ணிய நதிகளை நாடிகளாகக் கொண்டுள்ளது. சப்த மோக்ஷ புரிகளும் நம் நாட்டில்தாம் உள்ளன. ஒரு ஹிந்துவாகப் பிறந்தவன் ஒரு முறையாவது காசியாத்திரை மேற்கொண்டு, கங்கையில் நீராட வேண்டும் என்பது அல்லவோ நமது மரபு? கங்கையில் நீராடுவதால், நாம் செய்த பாவங்கள் தொலைகின்றன. காசியாத்திரை செய்த பிறகு, சேது என்று அழைக்கப்படும் ராமேஸ்வரம் என்ற புண்ணிய தலத்திற்குச் செல்வது என்பது நமது நாட்டின் தொன்மையான ஒரு வழக்கம்.

ஆம்! சேது என்கிற க்ஷேத்திரம் பரம பவித்ரமானது. அதன் பெருமை, புராணங்களிலும், இதிஹாசங்களிலும் பல இடங்களில் காணக் கிடைக்கின்றன. மூர்த்தி, தீர்த்தம், தலம் என்று மூன்று விசேஷங்களும் நிறைந்த இடம் சேது (ராமேச்வரம்).

பாபங்களிலேயே மிகக் கொடிய பாபமாகக் கூறப்படுவது 'ப்ரஹ்மஹத்தி' பாபமாகும். வேறு எங்கும் தொலையாத ப்ரஹ்மஹத்தி தோஷம், சேது தரிசனத்தாலும், அங்கு நீராடுவதாலும் தொலையும் என்று ஸ்ரீராமர், சீதா தேவிக்குச் சொன்னதாகவும், மற்றும் கம்ப ராமாயணத்தில் இந்த சேது க்ஷேத்திரத்தின் மாஹாத்மியத்தையும் காணலாம்.

கம்பராமாயணத்தில், கம்பர், சேது தரிசனம், மற்றும் அங்கு நீராடுவது இவைகளால் தொலையக்கூடிய பாவங்களின் பட்டியலை விரிவாக எடுத்துரைக்கிறார். அதை இப்போது காண்போமா!

*''அந்தணர் தம்மைக் கொன்றோர், அருந்தவர்க்கு இடுக்கண் செய்தோர்,*
*செந்தழல் வேள்வி செற்றோர், தீமனை இடுவோர், தம்பால்*
*வந்து இரந்தவர்க்கு உள்ளது ஈயா வைக்கும் வன் நெஞ்சர்; பெற்ற*
*தந்தையைத் தாயை பேணாத் தறுகணர், பசுவை செற்றோர்*

*குருக்களை இகழ்வோர், கொண்ட குலமகள் ஒழியத் தங்கள்*
*செருக்கினால் கணிகைமாரைச் சேர்பவர், உயிர்கொல் தீம்பர்,*
*இருக்குடன் அமரும் தெய்வம் இகழ்பவர், ஊன்கள் தின்று*
*பெருக்கிய உடலர், பொய்மைப் பிதற்றுவோர், பீடை செய்வோர்*

*வெய்யவன் உச்சி சேர மிக வழி நடந்து போவோர்*
*மையரும் முன்னோன் தன்னை வலி செய்யும் தம்பிமார்கள்*
*கையுள முதல்கள் தம்மை கரந்துதம்பிக்குவந்து ஈயார்*
*தூயனசொற்கள் சொல்வோர் சோம்பரை சுளித்துக் கொல்வார்*

*ஊரது முனிய வாழ்வோர், உண்ணும்போது உண்ண வந்தோர்க்கு*
*ஆர்வமோடு அறியாது இல்லம் அடைப்பவர், அமணே சென்று*
*நீரினுள் இழிவோர், பாவநெறிகளில் உயர்வோர், சான்றோர்*
*தாரமது அனைவோர், பூத்தோர்தமை இகழ் அறிவிலாதோர்*

*கண்டிலாது ஒன்று கண்டோம் என்று கைக்கூலி கொள்வோர்*
*மண்டாலதிபர் முன்சென்று வாழ்குடிக்கு அழிவு செய்வோர்*
*மிண்டுகள் சபையில் சொல்வோர், மென்மையால் ஒருவன்சோற்றை*
*உண்டிருந்து அவர்கள் தம்பால் இகழ்ச்சியை உரைக்கும் தீயோர்,*

*பின்னை வா தருவன் என்று பேசி, விட்டுவிக்கும் பேதை*
*கன்னியைக் கலக்கும் புல்லோர், காதலால் கள்ளும் மாந்தர்,*
*துன்னிய கலை வல்லோரை சுறித்து உரைத்து இகழ்வோர்,*
*சுற்றம் இன்னலுற்றிட தாம்வாழ்வோர் எளியரை இன்னல் செய்வோர்*

*ஆண்டவன்படவும் தங்கள் ஆருயிர் கொண்டு மீண்டோர்,*
*நாண் தொடர்ந்து உழல்வோர், நற்பாணவரை வஞ்சிப்போர்*
*நன்மை வேண்டிடாது இகழ்ந்து தீமை செய்பவர், விருந்தை நீப்போர்,*
*பூண்டு மேல்வந்த பேதை அடைக்கலம் போக்கி வாழ்வோர்,*

*கயிற்றிலாக் கண்டத்தாரை காதலித்து அணைவோர், தங்கள்*
*வயிற்றிடை கருவை தாமே வதைப்பவர், மாற்றார் தம்மைச்*
*செயிர்க்குவது அன்றிச் சேர்ந்த மாந்தரின் உயிரைச் செற்றோர்,*
*மயிர்க்குருள் ஒழியப் பெற்றாம் வெளவுவோர் வாய்மை இல்லோர்,*

*கொண்டவன் தன்னை பேணாக் குலமகள் கோயிலுள்ளே*
*பெண்டிரைச் சேர்வோர், தங்கள் பிதிர்களை இகழும் பேதை,*
*உண்டலே தருமம் என்போர், உடைப்பொருள் உலோபர், ஊரைத்*
*தண்டமே இடுவோர், மன்று பறித்து உண்ணும் தருகண்ணாளர்,*

*என்று இவர் முதலாமற்றும் ஏழுநரகு அடையும் பாவம்*
*ஒன்றினர் நன்றிதன்னை மறந்தவர் ஒழிய உள்ளோர்*
*துன்றிய வினைகள் எல்லாம் சுடர்கண்ட இருளே போல*
*தென்திசை வந்து சேது தரிசிக்கத் தீரும் என்றான்*

*பார்மேவும் மாந்தர்கள் செய் பஞ்சமா பாதகமும்*
*சீர்மேவும் திருஅணையைத் தெரிசிக்கத் தீரும் என*
*கார்மேவும் திருமேனிக் காகுத்தன் கட்டுரைந்து*
*வார்மேவும் முலைச்சனாகி மாதொடும் வழிக்கொண்டான்.*

இதைப் படிக்கும்போதே, சேது தரிசனம் மற்றும் அங்கு நீராடுவதால் ஏற்படும் பெருமை தெளிவாக விளங்குகிறது அல்லவா? ஆகவே, நாமும் சேது க்ஷேத்திர தரிசனம், ஸ்னானம் செய்து எல்லாப் பாவங்களில் இருந்தும் விடுபடுவோமாக!


ஸ்ரீ ஹரி:

## ஸ்ரீ கல்யாணஸ்ரீநிவாஸ பெருமாள் சந்நதி

மஹாரண்யம் கிராமம், மலைப்பட்டு B.O. படப்பை. P.O. 601 301.
ஸ்ரீ பெரும்புதூர். T.K. காஞ்சி மாவட்டம்

ஸகல மங்களங்களையும் அருளும் வரப்ரஸாதியான மஹாரண்யம் ஸ்ரீ கல்யாணஸ்ரீநிவாஸ பெருமாள் சந்நதியில் பக்தர்களின் பிரார்த்தனைகள், ஒவ்வொரு சனிக்கிழமையன்றும் காலையில் பெருமாளிடம் விண்ணப்பிக்கப்படுகின்றன.

பக்தர்கள், தங்களது பிரார்த்தனைகளை, தபால் தலை ஒட்டிய உறை மீது, ''பிரார்த்தனைப் பெட்டி'' என்று குறிப்பிட்டு அனுப்பினால், பிரசாதம் தபாலில் அனுப்பி வைக்கப்படும். பிரசாதத்திற்குக் கட்டணம் ஏதும் கிடையாது. பிரார்த்தனைகள் நிறைவேறியதும் நன்றிக் கடிதங்கள் அனுப்பினால் போதுமானது.

பிரார்த்தனைப் பெட்டியில் கண்டிப்பாகக் காணிக்கைகள் எதுவும் செலுத்தக்கூடாது. பிரார்த்தனைகள் மட்டுமே பிரார்த்தனைப் பெட்டியில் ஏற்றுக்கொள்ளப்படும்.

## 143

தஞ்சாவூரில், சைதன்ய மஹாபிரபு நாமபிக்ஷா கேந்திரா-மஹிளா மண்டலி சார்பில் கூட்டுப் பிரார்த்தனை ஏற்பாடு செய்யப்பட்டு சிறப்பாக நடைபெற்றது. இதற்காக இரவும் பகலும் முழுமூச்சாக, திருமதி சாவித்ரி ராமகிருஷ்ணனும் அவருக்கு உறுதுணையாக திருமதி கீதா தண்டபாணியும் பணியாற்றினார்கள். நமது ஸ்வாமிஜி அவர்கள் அதில் கலந்துகொண்டு அருளுரை வழங்கினார்கள்.

'மாதராய் பிறந்திடவே மாதவம் செய்திட வேண்டும்' என்றும் 'மாதர் தம்மை இழிவுபடுத்தும் மடமையைக் கொளுத்துவோம்' என்ற பாரதியின் வார்த்தைகளுடனும் உரையை ஆரம்பித்து ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்கள் பேசினார்கள்.

ஸ்வாமி விவேகானந்தர், 'பாரத நாடு வேகமாக முன்னேறாததற்கு முக்கியமான காரணம் நாம் பெண்களுடைய சக்தியை அலட்சியப்படுத்தியதுதான்' என்றார். ஸ்வாமி விவேகானந்தருடன் இணைந்து பணியாற்றிய வெளிநாட்டைச் சேர்ந்த சகோதரி நிவேதிதா, ஒரு சமயம், தமிழ்நாட்டிற்கு வந்தார். அப்பொழுது சுதந்திரத்திற்குப் பாடுபடும் விஷயமாக ஒரு போராட்டம் நடைபெற்றது. அதில் கலந்துகொள்ள, சுப்பிரமண்ய பாரதியார், தான் மட்டுமே வந்திருந்தார். அப்பொழுது அவரைப் பார்த்து சகோதரி நிவேதிதா, 'தங்களுடைய மனைவி செல்லம்மாவை ஏன் போராட்டத்திற்கு அழைத்து வரவில்லை. பெண்கள் கலந்துகொள்ளாத போராட்டம் வெற்றி பெறாது' என்றார். அதை பாரதியாரும் ஏற்றுக்கொண்டார்.

'நம்முடைய மதத்தில், எல்லா தெய்வங்களையும் பெண் தெய்வத்துடன்தான் சேர்த்து வழிபடுகின்றோம். ஸ்ரீமத் ராமாயணத்தில் சீதைமேல் மட்டும் ஆசைப்பட்ட ராவணன் அழிந்தான். ராமர் மேல் மட்டும் ஆசைப்பட்ட சூர்ப்பனகையின் மூக்கும் அறுந்தது. சீதாராமராக ஆசைப்பட்ட ஹனுமார் மட்டும் இன்று வரையிலும் சிரஞ்ஜீவியாக

இருக்கின்றார். பெண் தெய்வத்துடன் சேர்த்துதான் இறை வழிபாடு செய்ய வேண்டும் என்பதையே இது காட்டுகின்றது' என்றார்.

'காரைக்கால் அம்மையார், ஔவையார், ஆண்டாள், ஜனாபாய், சக்குபாய், மீரா, சாராதாமணி போன்ற எத்தனையோ பக்த சிகாமணிகள் பகவானை பக்தி செய்துள்ளனர்' என்று ஸ்ரீஸ்வாமிஜி அவர்கள் கூறினார்கள். சமீப காலத்தில் தஞ்சாவூரிலேயே வாழ்ந்த ரமண பக்தையான ஜானகீ மாதாவினுடைய சரித்திரத்தையும், சென்னையில் வாழ்ந்த ஆண்டவன் பிச்சை அவர்களின் சரித்திரத்தையும் உருக்கமாக எடுத்துரைத்தார்கள்.

'யாக்ஞவல்கியர், தன்னுடைய மனைவியை முன்னிட்டே ஞான தத்துவத்தை எடுத்து வைத்தார்'. 'துளஸீதாஸரை, அவருடைய மனைவியினுடைய ஒரு வார்த்தைதான் ஞானத்தை அடைய காரணமாக இருந்தது'. பில்வமங்களாவையும் சிந்தாமணி என்ற பெண்மணிதான் நல்ல அறிவுரை சொல்லி அவரை க்ருஷ்ண பக்தராக்கினார்'. 'முக்தி அடைவதற்கு காமம், கோபம், பயம் இந்த மூன்றும்தான் தடை. இதை சுலபமாக வெல்ல வேண்டும் என்றால், அந்த தெய்வத்தை தாயாராக நினைத்துவிட்டால் போதும். ஏன் என்றால், தாயாரிடம்தான் கோபமோ, பயமோ, காமமோ வராது. அவளுக்குத்தான் பிரும்மவித்யாஸ்வரூபிணி என்றும் பெயர்'. 'மாதர் சக்தி ஓங்கி இந்த வையகம் மங்களத்தை அடையட்டும்!' என்று ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்கள் அருளுரை வழங்கினார்கள்.

(தொடரும்)

**– டாக்டர் ஆ. பாக்யநாதன்**

---

பாரத நாட்டு மன்னர்கள் எந்த வெளிநாட்டுடனும் போரிட்டது கிடையாது. ஏன்? வீரமில்லையா? அது காரணம் இல்லை. பாரத நாட்டு மக்களும் சரி, மன்னர்களும் சரி, எப்பொழுதும் பணம், புகழ், பதவிக்காக அலைந்தது இல்லை. எங்கள் நாட்டு மக்கள் ஆன்மீகத்துடனே எழுந்து, ஆன்மீகத்துடனே வாழ்ந்து, ஆன்மீகத்துடனே உறங்குகின்றார்கள். எங்கள் நாட்டு மக்களை நீங்கள் ஏமாற்ற நினைத்தாலும் கூட ஆன்மீகத்தால் தான் ஏமாற்ற முடியும்.

**– சுவாமி விவேகானந்தர்**

# பக்தர்களின் கேள்விகளுக்கு ஸ்ரீ ஸ்வாமிஜியின் பதில்கள்

*கேள்வி : கோயில்களில் பிரதானமான தெய்வத்தைத் தவிரவும் மற்ற பல தெய்வங்கள் இருப்பது ஏன்? பல தெய்வங்களை ஒரே சமயத்தில் வழிபடுவது சரியா?*

பதில் : சமஸ்க்ருதத்தில் ''ஆஸ்தி'' என்றால் இருக்கிறது என்று ஒப்புக் கொள்வது, ''நாஸ்தி'' என்றால் இல்லை என்று மறுப்பது. இந்த இரு வார்த்தைகள்தான் ''ஆஸ்திகம்'', ''நாஸதிகம்'' என்ற இரு வார்த்தைகளுக்கு மூலமான பதங்கள். ஒரு ஆஸ்திகன் கடவுள் இருக்கிறார் என்று நம்புகின்றான். அவன், அனைத்து ஆலயங்களுக்கும் செல்வது, நற்காரியங்களில் பங்குகொள்வது சாதுக்களை தரிசனம் செய்வது போன்ற பல நல்ல செயல்களில் ஈடுபடுகின்றான்.

'பக்தன்' என்பவன் ஆஸ்திகனுக்கு ஒரு படி மேல். அவன், ஒரே ஒரு தெய்வத்தை மட்டுமே பற்றிக்கொள்கின்றான். ஹனுமான், நாயன்மார்கள், ஆழ்வார்கள், மீரா, தியாகராஜர் போன்றவர்கள் பரம பக்தர்கள். தேவாரங்களில் ஒரு பதிகம் கூட பகவான் விஷ்ணுவைப் புகழ்ந்து இருப்பதாகக் காண முடியாது. அனுமனுக்கு கிருஷ்ணனைத் தெரியாது, கோபிகைகளுக்கு ராமரைத் தெரியாது. அதே சமயம், ஒரு பக்தன் மற்ற தெய்வத்தை வெறுக்கவோ, அதை இகழ்ந்து பேசவோ மாட்டான். ஒரு மனைவியானவள், எங்ஙனம் தனது கணவனிடம் உண்மையான அன்பும், காதலும் வைத்து, அதே சமயம், கணவனின் உறவினர்களிடம் எப்படி மரியாதை செலுத்துவாளோ, அதேபோல், ஒரு பக்தன், பிற தெய்வங்களிடம் மரியாதையுடன் இருப்பான்.

இக் கட்டத்தில், ஒருவருக்கு ஒரு சந்தேகம் வரலாம் - ''ஒரே தெய்வத்திடம் ஏகாந்த பக்தி செய்வது என்பது குறுகிய மனப்பான்மை ஆகாதா?'' - என்று. ஒரு பதிவ்ரதை, தனது கணவனே கதி என்று நேர்மையாக இருப்பது என்பது ஒரு நற்குணம் அன்றோ! அதை

குறுகிய மனப்பான்மை என்று கூறுவது தவறு அல்லவா! சொல்லப்போனால், ஒரே தெய்வத்திடம் ஏகாந்த நிஷ்டை என்பது தானாக எழக்கூடிய ஒரு அரிய நற்குணமாகும்.

இப்பொழுது உடனே ஒரு கேள்வி எழும், ''பிறகு ஏன் நமது மதத்தில் இவ்வளவு தெய்வங்கள் உள்ளன?'' என்று. இதற்கு எளிதான பதில் என்னவென்றால் - மனிதர்களின் ருசி (விருப்பம்) பல வகைப்பட்டதாக உள்ளதால், இறை நாட்டம் உடையவர்களுக்கு, தங்களது ருசிக்கும் மனோ **பா**வங்களுக்கும் ஏற்ற ஒரு தெய்வத்தை தேர்ந்து எடுப்பதற்கான வாய்ப்பை கொடுப்பதற்காக, நமது மதம் பல தெய்வங்களைக் கூறுகின்றன.

சுருக்கமாகச் சொன்னால், உண்மை ஒன்றேயாகும், பலவாகா! எல்லாப் பாதைகளும் அந்த ஒரே உண்மையை நோக்கியே அழைத்துச் செல்கின்றன. நமது மனம், உலக விஷயங்கள் என்று வரும்பொழுது எப்படி சலிக்கின்றதோ, அதே போல் ஆன்மீகம் என்னும் பொழுதும் சலிக்கின்றது. பூமிக்கு அடியிலிருந்து நீரைப் பெற வேண்டுமென்றால், ஒரே இடத்தில் மேலும் மேலும் தோண்டுவதுதான் புத்திசாலித்தனம். அப்படியில்லாமல், பல இடங்களில் மாறி மாறி சிறிதுத் தோண்டினால், நமது முயற்சி வீணாகும் அல்லவா! ஆகையால், தங்களுடைய ஆற்றலை ஒரே திசையில் செலுத்துங்கள் - ஒரே கடவுளை நோக்கி! ஒரே குருநாதரின் மூலம்! அப்படி செய்தால், நீங்கள் லக்ஷியத்தை வெகு சீக்கிரத்தில் அடைந்துவிடுவீர்கள்!

***கேள்வி : ஸ்ரீமத் ராமாயணத்தில், ஒரு சலவைத் தொழிலாளி சொன்ன வார்த்தைகளைக் கேட்டு சீதா தேவியை ராமர் காட்டிற்கு அனுப்பியது சரியா?***

பதில் : இதற்கான விடையை பல கோணங்களில் இருந்து பார்க்கலாம். ஸ்ரீ ராமரும் சீதாதேவியும் பேசிக் கொண்டிருந்த பொழுது, சீதாதேவி வனவாஸத்தின்பொழுது வசித்த காடுகளுக்கு மீண்டும் போக ஆசைப்படுவதாக தெரிவித்தாள். உயர்ந்த பதிவிரதையான அந்த சீதையின் ஆசை நிறைவேறாமல் எப்படி போகும்? இச்சம்பவம் நடப்பதற்கு அந்த சலவைத் தொழிலாளி ஒரு கருவி மாத்திரமே.

சீதாதேவி பூமாதேவியின் பெண் ஆவாள். வால்மீகியும் பூமியிலிருந்து தோன்றியவர். மண்புற்றிலிருந்து தோன்றியதால் வால்மீகி; ஆகையால் அவர் சீதாதேவியின் தமயன் ஆவார். ஒரு கர்ப்பிணி பெண் பிரசவத்திற்கு தனது பெற்றோர்கள் வீட்டிற்குச் செல்வது என்பது நமது பழக்கத்திலுள்ளதுதானே. ஆகையால்தான் சீதாதேவி, தனது பிறந்த அகத்திற்குச் சமமான வால்மீகியின் ஆஸ்ரமத்திற்குச் செல்வதற்காகக் காட்டிற்குச் சென்றாள்.

வால்மீகி முனிவரின் ஆஸரமத்தில் சீதாதேவிக்குப் பிறந்த லவனும்-குசனும் ஸ்ரீமத் ராமாயணத்தைக் கற்று ஸ்ரீ ராமரிடமே கொண்டு சேர்ப்பதற்கான கருவிகள் ஆனர்கள். இந்த ராமாயணமே முடிவில் ஸ்ரீ ராமரையும் ஸ்ரீ சீதாதேவியையும் சேர்த்து வைத்தது. வால்மீகி ஆஸ்ரமத்தில் லவனும், குசனும் பிறந்து வளரவில்லையென்றால் இது நடந்திருக்கமுடியாது.

மற்றொரு கோணத்தில் பார்த்தால் ஸ்ரீ ராமர் தர்மத்தின் பொருட்டு தனது உயிர்போன்ற மனைவியை காட்டிற்கே அனுப்பிய மாபெரும் தியாகத்திற்காக, இன்றும், பலகோடி மக்களின் இருதயத்தில் வாழ்கிறார். அதேபோல், சீதாதேவியும் தனது தெய்வமான கணவரின் வார்த்தைகளை சிரமேற்கொண்டு காட்டில் ஒரு எளிமையான வாழ்க்கை வாழ்ந்ததால், இன்றும் பலகோடி பெண்மணிகளின் மனதைக் கவருகிறாள்.

*கேள்வி : சரணாகதி என்பது ஒரு உணர்வா அல்லது செயலா?*

பதில் : 'சரணாகதி' என்றால் தனது உடமைகளை மட்டும் ஒப்படைப்பது என்பதல்ல. உடையவனையும் ஒப்படைப்பதாகும். இவ்வாறு முழுமையாக ஒப்படைக்கவில்லையென்றால், அது 'சரணாகதி' ஆகாது. நாம் யாரிடம் சரணாகதி செய்கின்றோமோ அவரிடம் நமக்கு அசைக்க முடியாத நம்பிக்கை இருக்க வேண்டும். அதை குறித்து நமக்கு இரண்டாவது எண்ணமே இருக்கக்கூடாது. ஒருவர் இரண்டு நபர்களிடம் ஶரணகதி செய்யவும் முடியாது.

சரணாகதி என்று கூறும்பொழுது, நாம் யாரிடம் சரணாகதி செய்கின்றோம் என்பதை மட்டும் கருத்தில் கொண்டால் போதாது.

அவர் யாரிடம் சரண் அடைந்திருக்கின்றார் என்பதையும் பார்க்கவேண்டும். ஒருவர் ‘அபயம்’ என்று கூறி, சரணாகதியை ஏற்றுக்கொண்டுவிட்டு, அவரே, பயம், கோபம், காமம், த்வேஷம் போன்ற பல உலக உணர்ச்சிகளால் தாக்கப்பட்டாரானால், அந்த சரணாகதிக்கு அர்த்தமே கிடையாது. தன்னையுணர்ந்த ஒரு ஞானி மட்டுமே இவ்விதமான மனநிலைகளிலிருந்து விடுபட்டவர். ஏனென்றால், அவர் மனதையே அழித்தவர். ஆகையால், பரம்பொருளான, முற்றிலும் சரணடைந்த மஹானிடமோ, அல்லது தன்னை முற்றிலுமுணர்ந்த ஞானியினிடமோதான் சரணாகதி செய்ய வேண்டும்.

இப்படிப்பட்ட உன்னதமான நிலை, எளிதில் வராது. எண்ணற்ற சாதனைகள் செய்தால்தான் இந்த நிலை சித்திக்கும். ஆகையால் சரணாகதி என்பதே முற்றிலும் உணர்வு மாத்திரமே என்றாலும், அதை அடைவதற்கு பல செயல்களும் தேவைப் படுகின்றன.

Sri Hari :

PRANAMS TO THE LOTUS FEET OF

**HIS HOLINESS SRI SRI MURALIDHARA SWAMIJI**

Better Financial Planning lead to Best Prosperity

We, a leading financial Corporate, provide financial planning
to all HNI/NRI customers regarding child education,
Retirement solutions, Tax-Planning & investment with security.

For details contact :

**N.S. MAHESH BABU,** Sr. Consultant Trainer/Financial advisor
# 16, Welders Nagar, Tanjore Road, Trichy - 620 008.
email : maheshbabu49638@iciciprupartner.com
Mobile : 98941 76377 Phone : 0431-6451505

# பேச்சே கவிதையாகும்

- ஸ்ரீ ஸ்வாமிஜி

ஆதி காவியமான ஸ்ரீமத் ராமாயணத்தை வால்மீகி பகவான் செய்தார். அவர் ராமாயணத்தை செய்யத் தூண்டியது ஒரு சம்பவம். என்ன அது? க்ரௌஞ்சம் என்று வடமொழியிலும், அன்றில் என்று தமிழிலும் அழைக்கக்கூடிய பறவைகள் இரண்டு, சேர்ந்திருந்த நேரத்தில், அதன் மீது ஒரு வேடன் அம்புவிட்டான். தவம் கலைந்து எழுந்து வந்த வால்மீகி பகவானால், ஏற்கனவே அவர் வேடராக இருந்தபோதிலும், இதைக் கண்டு சகிக்க முடியவில்லை. அவர், அவனுக்கு சாபம் கொடுத்தார். என்ன ஆச்சரியம்? சாபம் கொடுப்பவர்கள் யாராவது ஸ்லோகமாக எழுதியா சாபம் கொடுப்பார்கள்? வால்மீகியினுடைய வாக்கிலிருந்து அது ஒரு ஸ்லோகமாக வந்ததைக் கண்டு, அவரே வியந்தார். தபோ மயமான மஹான்களுக்கு கவிதாசக்தி என்பது இயல்பாகவே அவர்களிடத்தில் விளங்குகின்றது என்பதைக் காணலாம்.

காஞ்சி ஸ்ரீ மஹாபெரியவர்கள், பிரதோஷ பூஜை செய்வது, மிகவும் கண் கொள்ளா காட்சியாக இருக்கும். கேரள தேசத்து குத்து விளக்குகள் எரிந்துகொண்டிருக்க, அதன் நடுவே ஸ்ரீ மஹா பெரியவர்கள் மேனி முழுவதும் திருநீறு அணிந்து, துவராடை உடுத்தி, ருத்ராக்ஷ மாலைகளை கழுத்தில் போட்டுக்கொண்டும், அதையே கிரீடமாக தலையில் சூட்டிக்கொண்டும், பத்மாசனத்தில், நிமிர்ந்து, கம்பீரமாக வீற்றிருப்பார்கள். உடல் இளைத்து காந்தியுடன் இருப்பார்கள். கண்களின் பார்வையோ, பார்க்கும் திசையை ஊடுருவிச் செல்லும். அவருடையே உள்ளத்தில் உள்ள அமைதியே அங்கு ஒரு எழுத்திலே வடிக்க முடியாத அமைதியைக் கொண்டு வந்துவிடும். அவருடைய பாதத்தை சிலர் பார்த்துக் கொண்டே இருப்பார்கள். பாரத தேசம் முழுவதும் நடந்தே யாத்திரை செய்த பாதத்தில், ஒரு கரும்புள்ளியோ, பித்தவெடிப்போ பார்க்க முடியாது. பிறந்த குழந்தையின் பாதங்கள்போல் ரோஜாவின் நிறத்தில் ரோஸாக இருக்கும். பக்தர்கள் கொண்டு வந்துள்ள தும்பை, வில்வம், ஊமத்தம், கொன்றை, வாழைப்பூ,

போன்றவைகள் பல மூங்கில் தட்டுகளிலே வைக்கப்பட்டிருக்கும். வேத விற்பன்னர்கள், கைகட்டி மரியாதையுடனும் வினயத்துடனும் பின்புறம் நின்று கொண்டிருப்பார்கள். ஸ்ரீ பெரியவர்கள் வில்வத்தை கையில் எடுத்தவுடன், அவர்கள் அனைவரும் ஒரே குரலில் ருத்ர த்ரிசதி அர்ச்சனையை ஆரம்பித்துச் சொல்ல, பார்ப்பவர்களுக்கு இதுதான் கைலாசமோ என்று தோன்றும். கைலாசபதி தன்னைத் தானே பூஜித்து கொள்கின்றானோ என்றுத் தோன்றும்.

இப்படி ஒவ்வொரு பிரதோஷத்திற்கும் பொன்னம்மா என்றொரு பாட்டி தும்பைப் பூக்களை நிறைய பறித்துக்கொண்டு வருவார்கள். ஒரு நாள், அந்தப் பாட்டியை அந்த மஹான் கருணையுடன் பார்த்து, ''இவ்வளவு கஷ்டப்பட்டு தும்பப்பூ பறித்துக் கொண்டு கொடுக்கின்றாயே! 'உன் துன்பமெல்லாம் போகவேண்டும் என்று தும்பப்பூ எடுத்துக்கொண்டு வருகிறாயா?' என்றார். பக்கத்தில் நின்றுகொண்டிருந்த எனக்கு அவர் சொன்ன விஷயத்தில் இருந்த கவிதை நயம் ஆச்சர்யப்பட வைத்தது.

ஸ்ரீ பெரியவர்களின் பக்தர்களில், கங்கா என்றொரு பாட்டி, நெய்வேலி பாலம் என்றொரு மாது. இருவருக்கும், ஒரு சமயம், ஒரு வித்வான், ''விவேக சூடாமணி பாடம் சொல்கின்றேன்'' என்றார். 'குருநாதரின் உத்தரவுடன் பாடம் கேட்கலாம்', என்று அவர்கள் இருவரும் வந்து விஷயத்தைச் சொன்னார்கள். அதைக் கேட்ட மஹாபெரியவர்கள், சிரித்துக் கொண்டே, கடமையெல்லாம் முடித்துவிட்ட ஒரு பாட்டியம்மாவும், கன்னியாகவே (நெய்வேலி பாலம் கல்யாணமே செய்து கொள்ளதவர்) வாழ்ந்துவரும் பெண்ணும் சேர்ந்து வேதாந்தம் கேட்க போகிறீர்களாக்கும்'' என்றார். இந்த நயத்தையும் அனுபவித்தேன்.

ஒரு சமயம், நாகலட்சுமி என்றொரு பக்தை மேற்கு மாம்பலத்தில் ஒரு தனிக் குடித்தனத்தில் வாழ்ந்து வந்தார். ஸ்ரீ பெரியவர்கள், அவருடைய வீட்டின் வாசல்வரை வந்து சென்றுவிட்டு ஏனோ திரும்பிவிட்டார். அந்த பெண்மணியோ இப்படி நடந்ததை நினைத்து நினைத்து அழுது அந்த மஹானைத் தொடர்ந்து, வந்துகொண்டிருந்தார். முடிவில், அந்த கருணாமூர்த்தியோ அந்த பக்தையைப் பார்த்து, ''கல்லாலும் மண்ணாலும் கட்டின

வீட்டுக்கு இனி என்னை கூப்பிடாதே! எந்த வீட்டிற்கு எனக்கு வரவேண்டும் என்று தெரியும்'' என்று சொன்னார்கள். நான் உன்னுடைய இருதயம் என்கின்ற வீட்டிற்குள் வந்து நிலையான வீடான மோக்ஷத்தைத் தருவேன் என்று சொல்லாமல் சொல்லிய அழகு இருக்கின்றதே! அற்புதம்! அதுபோல் ஒரு சமயம், ஒரு பக்தரிடம், ''என்னுடைய பாதுகைகளுக்கு தினமும் பூ போட்டு வா. அதுவே, உன்னுடைய வாழ்க்கைக்கு பாதுகாப்பாக (பாதுகா-பூ) இருக்கும்'' என்றும் அருளினார்.

எதற்காக இதை எழுதினேன் என்றால், மஹான்களுக்கு கவிதாநயம் என்பது ஸ்வபாவமானது என்பதை காட்டவே ஒரிரு விஷயங்களை ஸ்ரீ மஹாபெரியவர்கள் வாழ்க்கையிலிருந்து பார்த்தோம்.



**SRI AHOBILA MATH VEDA PATASALA**

Run by AHOBILA MATH SAMSKRITA VIDYA
ABIVARDHINI SABHA (3/1968)
WEST MAMBALAM, CHENNAI - 33.

## தர்மோபநயநமும் இலவச வேத கல்வியும்

மேற்கு மாம்பலம், 116, கே. ஆர். கோயில் தெருவிலுள்ள ஸ்ரீ அஹோபிலமடம் வேதபாடசாலையில் (In the Campus of Sri Ahobila Math Oriental Higher Secondary School, West Mambalam) மாசி மாதம் நடக்கவிருக்கும் தர்மோபநயநத்தில் (ரிக், யஜுர், ஸாமம் வேதங்களிலும்) தற்போது ஐந்தாம் வகுப்பில் பயின்றுவரும் தங்கள் குழந்தைகளுக்கு உபநயந ஸம்ஸ்காரமும் வரும் ஜூன் மாதம், ஆறாம் வகுப்பில் சேர்ந்து வேதமும் பயில ஆசைப்படுகிறவர்கள், காரியதரிசியை அணுகி உடனே பெயர் கொடுக்கவும்.

காலாண்டு ஸன்மானம், நன்றாக வேதத்தை ஓதி, மாதாந்திர பரீக்ஷையில் பாஸ் செய்கின்றவர்களுக்குத் தரப்படும். பாடசாலை வருகை 80% இருக்க வேண்டும். இது தவிர, தகுதி அடிப்படையில் வருடாந்திர உதவித் தொகை வழங்கப்படும்.

இப்படிக்கு
செயலர்

# மனம் போல் வாழ்வு - 2

- ஸ்ரீ ஸ்வாமிஜி

என்னிடம் சிலரை அழைத்து வருவார்கள். பார்ப்பதற்கு மிகவும் அழகாக இருப்பான். வெளிநாட்டிற்குச் சென்று உயர்ந்த படிப்புகள் படித்து அதில் முதன்மையாகவும் வந்திருப்பான். அவனுடைய தாயார், என்னிடம் 'இவன் வேலைக்குப் போகமாட்டேன் என்கின்றான். எதற்கும் பயப்படுகிறான். எதைச் செய்வதற்கும் தயங்குகிறான். சோர்ந்து சோர்ந்து படுத்துக் கொள்கிறான். தன்னம்பிக்கையற்றவனாகவே உள்ளான்' என்று கூறுவார்கள். இந்நிலையிலும்கூட, மனிதனின் அந்த அவசியமான மூன்றாவது தேவையைப் பற்றி புரிந்துகொள்ளாமல் கண்டவர்களிடம் அழைத்துச் சென்று, ஏற்கனவே பயந்துள்ள இவனை, மந்திரம், தந்திரம், பேய், பிசாசு போன்றவற்றைச் சொல்லி மேலும் பலஹீனம் செய்து இதிலிருந்து மீள முடியாமல் செய்துவிடுகிறார்கள்.

ஆரம்பத்தில், இந்த மனோநோயை பாதிக்கப்பட்டவர் களாலேயே உணர முடியும். ஆனால், மருந்துவரிடம் சென்றால் பைத்தியம் என்பாரோ, மேலும் சமுதாயம் என்ன நினைக்குமோ என்று தவிர்த்தால் இவை அதிகமாகும்பொழுது மற்றவர்களாகவே இவர்களை மருந்துவர்களிடம் அழைத்துச் செல்வார்கள். மேலும், நவீன மருத்துவத்தைப் பற்றி அறியாத பல அரைகுறை மனிதர்கள் இத்தகைய மருந்துகளுக்கு பக்கவிளைவுகள் அதிகம் என்று வேறு சொல்லிவிடுவார்கள். ஆகவே, மருத்துவரை அணுகுவதற்கு இதன் பொருட்டு பயப்படுபவர்களும் உண்டு. அந்த நிலையில் இவற்றிற்கான மருத்துவ சிகிச்சையும் நேரமும் அதிகமாகவே இருக்கும். குணமடைவதற்கான காலமும் விரிவாகும்.

உடலுக்கு எப்படி தலைவலி, ஜலதோஷம் போன்ற சிறிய நோய்களிலிருந்து, புற்றுநோய், சிறுநீரகக்கோளாறு போன்ற பெரிய நோய்கள் வரை உள்ளனவோ, அதுபோல், மனதிற்கும் நோய் உண்டு என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும். நம்முடைய ஆயுர்வேத நூல்களில் இவற்றைப் பற்றி ஏற்கனவே கூறியுள்ளார்கள். சரீரத்திற்கு வரும் நோயை வியாதி என்றும் மனதிற்கு வரும்

நோயை ஆதி என்றும் கூறியுள்ளார்கள். மேலும், ஸ்ரீமத்பாகவதத்தில் ஒரு ஸ்லோகத்தில் கலியுகத்திலே மனோநோயால் பீடிக்கப்பட்டவர்கள் அதிகமாக இருப்பார்கள் என்று கூறப்பட்டுள்ளது. இதிலிருந்து மனதிற்கும் நோய் உண்டு என்று நம் மதத்தில் குறிப்பிடப் பட்டுள்ளதை உணரலாம்.

அப்படியானால், மனதை எப்படி ஆரோக்கியமாக வைத்துக் கொள்வது? மனம் எந்தக் காரணங்களால் தன்னுடைய ஆரோக்கியத்தை இழக்கின்றது என்பதை நாம் அறிந்துகொள்ள வேண்டும். சரீரத்திற்கு ஒத்துக்கொள்ளாத ஆகாரம் நீர், காற்று, இருப்பிடம் சரீரத்தினுடைய ஆரோக்கியத்தை பாதித்துவிடுவது உறுதி. அறிவிற்கு உதவாத உபதேசங்களும், நூல்களும் நம்மை அறிவிழக்கச் செய்வதும் உறுதி. அதுபோல், மனதிற்கும், ஆரோக்கியம் கொடுக்கும் விஷயங்கள், ஆரோக்கியத்தைக் கெடுக்கும் விஷயங்கள் என்று உண்டு. மேலும், இன்றைய காலகட்டத்தில் மனதினுடைய ஆரோக்கியம் பற்றிய கவனம் அதிகமாகத் தேவைப்படுகின்றது. ஏனென்றால், இன்றைய மக்கள்தொகைப்பெருக்கம், சமூக அமைப்பு, விஞ்ஞானத்தின் வளர்ச்சி ஆகியவை, மனிதனுடைய வாழ்க்கையை மிகவும் சவால் மிக்கதாவும், கடினமானதாகவும் ஆக்கிவிட்டன. அதற்குத் தகுந்தாற் போல் எதிர்பார்ப்பு, ஏமாற்றம், போட்டி, பொறாமை, நஷ்டம், துக்கம், விபத்து, ஆபத்து, இயந்திரத்தனமாக வாழ்க்கையென்று எல்லாமே அதிகமாகிக் கொண்டிருக்கின்றன. இவற்றையெல்லாம் ஒரு மனிதன், மனதினால்தான் எதிர்கொள்ள வேண்டும். ஆகவே, வாழ்க்கையில் உள்ள பிரச்சனைகளை திறம்பட எதிர்கொள்ள வேண்டிய அளவிற்கு மனதை பக்குவமுள்ளதாக மாற்றிக்கொள்ள வேண்டும்.

'இந்த மனதை எப்படி அவ்வாறு மாற்றுவது! என்கின்றீர்களா மிகவும் சுலபம்? இந்த மனது எப்படி இருப்பதாக அந்த மனதை நம்ப வைக்கின்றீர்களோ, அப்படியே அது ஆகிவிடும்! இதுதான் மனதினுடைய விசித்திரமான தன்மை! மனோசக்தியை இழக்கக் கூடாது என்பதை வலியுறுத்தும் ஒரு கதை, அந்தக் காலத்திலேயே மஹாபாரதத்தில் கூறப்பட்டிருக்கின்றது.

மஹாபாரத யுத்தத்தில், சல்லியன் என்ற அரசன் கர்ணனுக்கு தேரோட்டியாக இருந்தான். யுத்த சமயத்தில் தேரோட்டியான

சல்லியன், கர்ணனிடம், அர்ஜுனனின் பெருமைகளையும் அவனைப் பற்றிய புகழ்ச்சிகளை மட்டுமே திரும்பத் திரும்பப் பேசினான். அத்துடன் நின்றுவிடாமல், கர்ணனை மிகவும் இகழ்ந்தும் பேசினான். கர்ணனைப் பார்த்து, ''ஒரு மான், பெரும் சக்தி படைத்த சிங்கத்தை சண்டைக்கு அழைப்பதுபோல், இப்பொழுது நீ அர்ஜுனனைப் போருக்கு அழைக்கின்றாய்! தாயின் மடியில் படுத்திருக்கின்ற ஒரு சிறிய குழந்தை, வானத்திலே இருக்கும் சந்திரனைப் பார்த்து தன்னால் அதைப் பிடித்து விடமுடியும் என்று எண்ணுவதுபோல், நீ அர்ஜுனனை வீழ்த்தி விடமுடியும் என்று கனவு காண்கிறாய். ஒரு புலியைக் கண்டு நாய் குரைப்பதைப்போல் அர்ஜுனனைப் பார்த்து நீ குரைக்கின்றாய். அர்ஜுனனை நேரில் சந்திக்காத வரையில்தான் நீ உன்னை வீரனாக நினைத்துக்கொள்ள முடியும். என்றுமே நீ நரிதான். அர்ஜுனன் சிங்கம்தான். அவன் பூனை என்றால் நீ எலி! அவன் யானை என்றால் நீ முயல்! அர்ஜுனனிடம் நீ தோற்பது உறுதி! உனக்குப்போய் தேரோட்டியானது எனது மாபெரும் துரதிருஷ்டம்'' என்று திரும்பத் திரும்ப கர்ணனிடம் சொல்லி மனதளவில் அவனுடைய சக்தியைப் பெரிய அளவில் இழக்கச் செய்தான். இதனால் அர்ஜுனனை எதிர்த்து கர்ணனால் மிகுந்த வீரத்துடன் யுத்தம் செய்ய முடியாமல் போயிற்று. (மஹாபாரதம்-கர்ணபருவம்)

இப்படி, நம் புராணங்களிலேயே பல இடங்களில் மனோ தத்துவம் பேசப்படுகின்றது. மனதினாலேயே தீர்மானிக்கப்பட்ட ஒரு விஷயமாக இருப்பதால்தான் ஒருவன் 'மனிதன்' என்று அழைக்கப்படுகின்றான். நமது திராவிட மரபிலே மனிதர்களை 'உன் மனம் போல் வாழ்' என்று வாழ்த்தும் ஒரு பழக்கமும் இருந்துவருகின்றது. அதாவது, 'உன் மனம் போல்தான் உன் வாழ்க்கையும் அமையும்' என்பதே இதன் பொருள்.

மனம், பழக்கத்திற்கு அடிமையாகக்கூடிய ஒன்று; கட்டளைக்கு அடிபணியாத ஒன்று. உதாரணமாக ஒரு மனிதனைப்பார்த்து 'கை தட்டு' என்றால் தட்டிவிடுவான். ஆனால், 'அழு' என்றால் அழமுடியாது. அழுகை வருவது போல் ஒரு துயரத்தை அவன் மனம் உணர்ந்தால்தான் அவன் அழுவான். அதாவது, அவனுடைய மனதில் உள்ள உணர்வுகளைத் தூண்டுவதற்கு வெளியிலிருந்து ஒரு

விஷயம் வேண்டும். நல்ல உணவினுடைய வாசனையை முகர்வதாலேயே பசி தூண்டடப்படுகின்றது. மலம், மூத்திரம் இவற்றால் அருவருப்பு தூண்டப்படுகின்றது. இதுபோல், மனதில் உள்ள உணர்வுகளைத் தூண்டுவதற்கு வெளியிலிருந்து ஒரு உந்துதல், Triggering factor தேவைப்படுகின்றது. அப்படிப்பட்ட மனதில் ஆற்றல் பெருகுவதற்கும், சக்தி நிரம்புவதற்கும், அமைதி நிலவுதற்கும், ஆனந்தம் பொங்குவதற்கும் இன்றியமையாத உந்துதல் (Triggering factor) தான் ஆன்மீகம். எப்படி என்று கேட்கின்றீர்களா?

உண்மையில் ஆன்மீகம் என்பது பகுத்தறிவிற்கும், அறிவியல் வளர்ச்சிக்கும் நவீன சமுதாய முறைகளுக்கும் மாறான ஒரு விஷயமே அன்று! அது எல்லாவற்றிலும் பிரிக்கமுடியாதபடி கலந்து பின்னிப்பிணைந்துவிட்ட ஒன்று!

ஏனென்றால், இறைவனை மறுப்பவன், ஏற்பவன் என்று இரண்டு நபர்கள் உலகத்தினிடையே கிடையாது. எறும்பு முதல் மனிதன் வரை எல்லோரும் ஆனந்தத்தையே நாடுகிறார்கள். அந்த ஆனந்தமும் துக்கக் கலப்பில்லாததாகவும், நிரந்தரமானதாகவும் இருக்க வேண்டும் என்றே விழைகின்றார்கள். எறும்பு அந்த ஆனந்தத்தை சர்க்கரையில் தேடுகின்றது. திருடன் அதே ஆனந்தத்தை திருட்டில் தேடுகின்றான். உலகமக்கள், புகழிலும், பதவியிலும், பொருளிலும், குடும்பத்திலும், நட்பிலும் தேடுவதும் அதே ஆனந்தத்தைத்தான்! இறைவனை மறுப்பவனும், இறைவனை ஏற்பவனும்கூட தேடுவதும் அதையே! அந்த துக்கக்கலப்பில்லாத நிலையான ஆனந்தத்தை நிலையற்ற உலக விஷயங்களில் தேடாமல் சரியான இடத்தில் தேடுவது தான் ஆன்மீகம்! இறைவன் என்பவன் ஒரு ஆறடி உருவம் அல்லன். நிலையான ஆனந்தம்தான் இறைவன். இறைவனை ஏற்காதவன்கூட ஆனந்தத்தைத் தேடுகிறேன் என்று நினைத்துக்கொண்டு இறைவனைத்தான் தேடிக்கொண்டு இருக்கிறான். இறைநெறியாளர்கள் அந்த ஆனந்தம் எங்கு உள்ளது என்றும், எப்படி அடைய வேண்டும் என்பதையும் சரியாக அறிந்தவர்கள். மற்றவர்கள் அதை அடைய வழி தெரியாமலும், இருக்கும் இடம் தெரியாமலும் தவிக்கின்றார்கள்.

உலகம் முழுவதிலும் உள்ள பலர், பஞ்சபூதங்கள் பற்றி ஆராய்ச்சி செய்துகொண்டிருக்க, நம்முடைய நாட்டு ரிஷிகளோ

பார்வை, புலன்கள் எல்லாவற்றையும் உட்புறமாக இருத்தி, மனதைப் பற்றியும், ஆனந்தத்தைப் பற்றியும், இறைவனைப்பற்றியும் பல உண்மைகளையும், ஆற்றல்களையும் கண்டறிந்தனர். சுகம், துக்கம் இரண்டும் புறத்தில் உள்ள எந்த விஷயத்திலுமில்லை. அது மனதைப் பொறுத்த ஒரு விஷயமே என்பது அவர்களுடைய முடிவு. இதை ஒரு சிறிய உதாரணத்தால் புரியவைக்க வேண்டுமெனில், பெரிய பங்களா, நவீனமான கார், அன்பான குடும்பம், நிறைவான செல்வம் என்று எல்லாவித வசதிகளும், போகங்களும் உள்ளவன்கூட, மது அருந்திவிட்டு, தன்னை மறந்த நிலையில், எண்ணங்கள் ஒடுங்கிய மனமயக்கத்தில் இருப்பதைத்தான் விரும்புகின்றான். இதிலிருந்தே ஆனந்தம் என்பது மனதைப் பொறுத்ததே என்பது தெளிவாகின்றதல்லவா?

மேலும் ஒரு படி சென்றால், நம் மதத்தின்படி, மனம் என்ற ஒரு பொருளே இல்லை. எண்ணங்கள்தான் மனது. (Other than thoughts there is no mind!) எவ்வளவிற்கு எவ்வளவு எண்ணங்கள் வேகமாகத் தோன்றுகின்றனவோ, அவ்வளவிற்கு அவ்வளவு மனம் தன் வலிமையை இழக்கின்றது. எவ்வளவிற்கு எவ்வளவு எண்ணங்கள் குறைகின்றனவோ அவ்வளவிற்கு அவ்வளவு மனவலிமை பெருகுகின்றது: ஆனந்தம் ஏற்படுகின்றது. இதைப் புரிந்துகொள்வது மிகவும் சுலபம். நாமேகூட அன்றாட வாழ்க்கையில் எண்ணங்கள் மேன்மேலே அலைமோதினால் மனக்குழப்பம் (Confusion) ஏற்பட்டு வருந்துகின்றோம். எண்ணங்களில் ஓட்டம் குறையும்பொழுது மனசாந்தி ஏற்பட்டுவிட்டது என்று மகிழ்கின்றோம். எண்ணங்களின் ஓட்டம் ஓரளவிற்கு ஒடுங்கும் தூக்கம், போதை மயக்கம் போன்ற நிலைகளில் சந்தோஷம் உள்ளது என்பது அனைவரும் ஒப்புக் கொள்ளும் விஷயம் தானே?

அப்படியிருக்க, எண்ணங்களே இல்லாத நிலை-அதாவது, மனதே அழிந்துவிட்ட நிலை-என்ற ஒன்று இருந்தால், அதிலுள்ள பேரானந்தத்தைப் பற்றி பேசவும் முடியுமோ? அந்த பேரானந்த நிலையே இறைவன்; ஆத்மா; ஆன்மீகத்தின் முடிவு. அந்த இறுதிநிலையை அடைய படிப்படியாக வழங்கப்படும் பயிற்சியே பூஜை, ஜபம், தியானம் போன்ற ஆன்மீக சாதனைகள்.

உடலுக்கும் அறிவிற்கும் முக்கியத்துவம் கொடுக்கும் நாம் மனதிற்கும் முக்கியம் கொடுக்கவேண்டும் என்பதற்காக ஏற்பட்டதே

தெய்வ வழிபாடு. அந்த மனம் சோர்வு அடையாமல் எப்பொழுதும் புத்துணர்வுடன் இருக்க வேண்டும் என்பதற்காகவேதான் இசை, நாட்டியம், கோவில், கலை, கவிதை, நாடகம், உற்சவம், பண்டிகைக் கொண்டாட்டங்கள் போன்றவைகள் உள்ளன. மனதிற்கு ஓய்வு வேண்டும் என்பதற்காக இறைவன் தந்துள்ள வரப்பிரசாதமே உறக்கம்!

ஆனால், இவற்றைப் பற்றிய பூரணமான அறிவு இல்லாமல் ஆன்மீக உபதேசத்தை ஆரம்பித்துவிடுவதால்தான் பல கோளாறுகள் ஏற்படுகின்றன. புத்தர் முதலில் கடுமையாக தியானம் செய்ய ஆரம்பித்தார். உடனே தேவர்கள் சிலர் அவர் முன்பாகத் தோன்றி, வீணையைக் கடுமையாக மீட்டினால் தந்திகள் அறுந்து விடும். மெதுவாக மீட்டினால் இசையே வராது. மிதமாக மீட்டினால் மட்டுமே இனிய இசை வரும்'' என்று கூறினர்.

புத்தர், தேவர்கள் அவ்வாறு குறிப்பால் உணர்த்தியதன் உண்மையைப் புரிந்துகொண்டு, எடுத்த எடுப்பிலேயே மிகவும் தீவிரமாக தியானம் செய்யாமல், மெல்லத் தீவிரத்தை அதிகரித்து, சீராக தியானித்து இறுதியில் பேரானந்த நிலையை அடைந்தார்.

யானையினுடைய தும்பிக்கை எப்பொழுதும் ஆடிக்கொண்டே இருக்கும். அதை நிறுத்தவேண்டுமெனில் யானைப்பாகன் ஒரு சங்கிலியை அதனிடம் கொடுப்பான். அந்த சங்கிலியை ஆதாரமாகப் பிடித்துக்கொண்டு, யானை தும்பிக்கையை ஆட்டாமல் நிற்கும். அதுபோல், எப்பொழுதும் அலைந்தே பழக்கப்பட்ட மனதிற்கு பூஜை, ஜபம், தியானம் போன்ற ஆன்ம சாதனைகளைக் கொடுத்து மெல்ல மெல்ல எண்ணங்களை ஒடுக்கி, ஒருமுகப்படுத்தி இறுதியில் எண்ணங்களற்ற, மனம் அழிந்த, அந்த நிரந்தரமான பேரானந்த நிலைக்கு அழைத்துச் செல்வதே ஆன்மீகம். அந்த நிலையைத்தான் நமது பெரியோர்கள் ''சும்மாயிருக்கும் சுகமே'' என்று பாடியுள்ளார்கள்.

ஒரு மனிதனுக்கு ஏதோ ஒரு விட்டமின் தேவை என்றால் அதை ஒரே நாளில் ஒரு அரை கிலோ சாப்பிடக் கூடாது. பெரிய பாடங்களை சிறிய வயதில் திணிக்கக் கூடாது என்பதுபோல் 'மனதின் பக்குவத்தைப் பொறுத்து தகுதியான பயிற்சிகளை மேற்கொண்டு சீராகச் செய்து வந்தால், ஆனந்தமாக வாழமுடியும்' என்பதே ஆன்மீகம் கண்ட உண்மை!

# பாலகர்களுக்கு ஒரு கதை - 115

கௌதம புத்தர் மிகவும் அழகானவர். அவருடைய அழகு அனைவரையும் மயக்கியது. யார் யாரை மயக்கியது என்றால் கொலை வெறிபிடித்தவர்களைக்கூட. அவரது அழகும் அன்பும் ஞானமும் மயக்கியது என்றால் சாதாரண மனிதர்கள் மயங்கியதில் ஒன்றும் வியப்பில்லை!

புத்தர் காலத்தில் அங்குலிமாலன் என்ற ஒரு கொலைக்காரன் இருந்தான். அவனுக்கும் ஒரு குறிக்கோள் இருந்தது! அது சற்றே வித்தியாசமானது! ஆயிரம் மனிதர்களைக் கொலை செய்வது என்ற விந்தையான குறிக்கோள்! கொலைகளின் கணக்குக்காக அவர்களது கைவிரலை வெட்டி மாலையில் கழுத்தில் கோர்த்துக்கொள்வான். அதனால்தான், அவனுக்கு 'அங்குலிமாலன்' என்றே பெயர் ஏற்பட்டது.

பல கொலைகள் செய்த அவனுக்கு இப்பொழுது ஆயிரத்தை அடைய ஒரே ஒரு விரல் தேவைப்பட்டது. மக்கள் எல்லோரும் நடுங்கிக்கொண்டிருந்தனர். அவன் பக்கத்திலுள்ள காட்டில்தான் வாழ்கிறான் என்றும் மக்களுக்குத் தெரியும். ஆனாலும் யாராலும் அவனைப் பிடிக்கவும் முடியவில்லை.

புத்தர், ஒருசமயம், அந்த காட்டின் வழியாக செல்ல நேர்ந்தது. அவரை எல்லோரும் எச்சரித்தார்கள், 'அந்தக் காட்டின் வழியே செல்லவேண்டாம்' என்று. 'வாழ்க்கை முழுவதும் அவருடன் இருப்பேன்' என்றவர்கள்கூட, அன்று அவருடன் செல்ல பின் வாங்கிவிட்டார்கள். புத்தர் மட்டும் கவலைப்படாமல் பயணத்தை மேற்கொண்டார். அவர், 'என்ன நடக்கிறது என்று பார்க்கலாம்' என்று கூறினார். மலை மீது அமர்ந்திருந்த அங்குலிமாலன், புத்தர் தைரியமாக காட்டுக்குள் நடந்து வருவதைக் கண்டு வியந்தான். புத்தரின் அழகும் அமைதியும் அவனைக் கவர்ந்தது. இனம் புரியாத ஆனந்தம் அவனுக்குள் ஏற்பட்டது. அழகான பூங்காவில் பல மலர்கள் மலர்ந்து மணம் வீசினால் நாம் எத்தனை ஆசைப்படுகிறோம். புத்தரைப் பார்த்துக்கொண்டே இருக்க வேண்டும் என்று அங்குலிமானுக்குத் தோன்றியது. அவன் புத்தரை

மறுபடியும் எச்சரித்தான். கொலை செய்யப் போகிறவன் யாராவது முன்னமே எச்சரிப்பார்களா? புத்தர், அவனது எச்சரிப்பைக் கேட்டு மெதுவாக நகர்ந்துகொண்டே சிரித்தார். அங்குலிமாலன், ''நீங்கள் என்ன செவிடா? குருடா? நகராதீர்கள். நான் உங்களை கொலை செய்துவிடுவேன்'' என்றான்.

புத்தர், ''நீ தான் நகர்கிறாய்! நான் நகர்வதை என்றோ நிறுத்திவிட்டேன்! என்னிடம் எண்ணம் இல்லை. அதனால் சலனமில்லை. நான் நகர்வதில்லை'' என்றார். சாப்பிடுவதற்கு முன்பு நாம் இலையை நன்றாக நறுக்கி அதில் உணவு வைத்து உண்கின்றோம். பிறகு அதைத் தூக்கி குப்பையில் போடுகிறோம். அதுபோல், ஞானிக்கு உடல், இறைவனை அடைவதற்காகத்தான். உடல் ஒரு சாதனம்தான். ஆத்மஞானி, சரீரத்தைப் பற்றிக் கவலைப்படுவதே இல்லை. புத்தர் அவனைப் பார்த்து, ''இந்த சரீரத்தால் எந்தப் பயனும் இல்லை என நினைத்தேன். இப்போது இதனால் உன் குறிக்கோள் நிறைவேறும் என்றால் எனக்கு மிகவும் சந்தோஷம். உன் விருப்பத்தை நிறைவேற்றிக் கொள்'' என்றார்.

அங்குலிமாலன் இதைக் கேட்டு வியந்தான். இப்படி தைரியமாக இருக்கிறாரே! துளியும் பயமில்லையே! கலக்கமில்லையே இவருக்கு! துணிச்சலுள்ளவராக இருக்கிறாரே! என்று வியந்து, புத்தரின் அருகில் வந்தான். அவரைப் பார்த்து, ''நான் உங்களை கொலை செய்யும் முன் உங்களுக்கு ஏதாவது விருப்பமிருந்தால் சொல்லுங்கள்'' என்றான்.

புத்தர், ''இதோ இந்த மரத்தின் கிளையை வெட்டு'' என்றார். அங்குலிமாலன் அதற்கு, ''இதென்ன குழந்தைத்தனமான செயல்!'' என்று கிளையை வெட்டினான். புத்தர் அவனைப் பார்த்து, ''கிளை எங்கிருந்ததோ அங்கு மீண்டும் அதை ஒட்டிவிடு'' என்றார். அங்குலிமாலன் யோசித்தான். ''அது எப்படி முடியும். என்னால் முடியாது'' என்றான்.

புத்தர், ''உன்னால் ஆக்குவதற்கு முடியவில்லை. ஆனால், அழிக்க மட்டும் முடிகிறதே! ஆக்கத் தெரியாதவன் எப்படி அழிக்கலாம்?'' என்று கேட்டார். அங்குலிமாலன் இப்போது குழம்பிவிட்டான். 'கொலை செய்வது, அழிப்பது இதெல்லாம் நம்

வீரத்தைக் காண்பிக்கவா? மனதில், உள்ள காமம், போராட்டம் இவைகளை வெல்வதுதான் வீரம்' என உணர்ந்தான். அவனுக்கு கண்ணீர் பெருகியது. புத்தரின் காலில் வீழ்ந்தான். ''இத்தனை நாட்களாக நான் மற்றவர்களைக் கொன்றேன். இன்று நீங்கள் என்னைக் கொன்றுவிட்டீர்கள். என் ராக்ஷச குணத்தைக் கொன்று விட்டீர்கள்'' என்று புத்தரைப் புகழ்ந்தான். அவன் ஒரு பிக்ஷுவாக பிக்ஷை எடுத்து உண்பவனாக மாறினான்.

முதலில் மக்கள் அவனைக் கண்டு பயந்தனர். அவனுக்கு யாரும் உணவளிக்க தயாராகவில்லை. நாளாக நாளாக அவனால் அபாயமில்லை என்று தெரிந்ததும், அவனைக் கேலி செய்தனர். ஏளனம் செய்தனர். அவன் எதையும் பொருட்படுத்தவில்லை. மற்றவர்கள் அவனைத் தொந்தரவு செய்ய ஆரம்பித்தனர், அடித்தனர்.

ஒரு சமயம், அங்கு வர நேர்ந்த புத்தர், அங்குலிமாலன் மக்களால் அடிபட்டு துன்புறுவதைக் கண்டார். அவனிடம் சென்றார். அவன் புத்தரைப் பார்த்து, ''அவர்கள் என்னை அடித்தார்கள்! அது என்னைத் தொடவில்லை. நீங்கள்தான், ''நான் சரீரமில்லை, அழியாத ஆத்ம ஸ்வரூபம் என்று கூறினீர்களே, அதனால், எனக்கு இப்போது ஒரு வேதனையுமில்லை'' என்றான்.

''நீ உடல் இல்லை. அதனது துயரம் உனதில்லை. அறிவு, மனம், இவையெல்லாம் நீயில்லை. நீ அழியாத ஆத்ம ஸ்வரூபம். மனம், அறிவு, சரீரம், இவற்றுக்குக் கேடு வந்தால் அது உனக்கில்லை''. இந்த உண்மையைத்தான் அங்குலிமாலனுக்கு புத்தர் உணர்த்தினார். ஞானிகள் எப்படி எல்லோரையும் மாற்றுகிறார்கள் பாருங்கள். மஹான்களால்தான் இத்தகைய காரியம் செய்ய முடியும்!

**பக்கபலம்**

நெல்லில் உள்ள அரிசிதான் முளைக்கிறது. ஆனால், அதற்கு ஆவரணமாக உள்ள உமியை நீக்கிவிட்டால் அது முளைப்பதில்லை!

எவ்வளவு ஆற்றல் வாயந்த திறமைசாலியாக இருந்தாலும், பக்கபலமில்லாவிடில் அவன் தொடங்கிய செயல் ஈடேறாது.

- **ஔவையார்**

# மாலே மணிவண்ணா - 57

- மகாவித்துவான் மயிலம் வே. சிவசுப்பிரமணியன்

எம்பெருமான் திருநாமத்தை, திருப்புகழை விரித்துச் சொல்லவென்று ஒரு தகுதியில்லை; தன்னைச் சொல்வார்க்கு அத்திருநாமமே அத்தகுதியையும் உண்டாக்கிவிடும் அல்லவா?

திருமாலே! முறையுற அறிந்து நின்னைப் புகழும் அன்பர்கள் நின்னைத் தொழுது தோத்திரம் செய்து நின் புகழை விரித்துச் சொல்லியுள்ளார்கள். அவர்கள் எவ்வளவு உயர்வும் தூய்மையும் உடையவர்கள்; மெய், வாய், கண், மூக்கு செவி முதலாகிய ஐம்பொறிகளையும் அவற்றின் காரியமாகிய, ஊறு, சுவை, வடிவம், நாற்றம், சப்தம் ஆகியவற்றின் செல்லாது நிறுத்தியவர்கள். இந்திரியத்தை வெற்றிகொண்ட ஜிதேந்திரியர்கள்.

புறத்தே நின்ற விஷயங்களை அகத்தே கொண்டு சென்று உலக சுகத்தில் ஆன்மாவை ஈடுபடுத்தி, தந்திரமாகச் செயல்படுகிற படியால் அவற்றுக்கு ஐம்பொறிகள் எனப் பெயராயிற்று.

இந்த ஐந்தும் புறக் கரணங்கள்; இவற்றைக் கட்டுப்படுத்தி நெறிவழி நிறுத்தினாலும் உள்ளே உள்ள அகக்கரணங்கள் சும்மாயிரா! அவை உலக சுகங்களை நினைத்து தன்னில் தானாய் இன்பம் உளதாகக் கருதி வேதனைக்கு வித்திடும்.

இந்த அகக்கரணங்கள் மனம், புத்தி, சித்தம், அகங்காரம் என நான்காகும். இவை பொறிகளால் கவரப்படும் விஷய நுகர்ச்சியை வாங்கி உயிருக்குச் செலுத்தும் ஆற்றல் பெற்றவை. இவற்றுள் மனம், அகங்காரம் என்னும் இரண்டும் வைணவ தத்துவங்களுள் இடம் பெற்றவையாகும். அவற்றைச் சித்தம் என்றும் கூறுவர். இந்த மனம் எனப்படும் சித்தம் சுத்தமாக தூய்மையாக ஆதல் வேண்டும். பொறிகளை விட உயிருக்கு நெருக்கமாக இருப்பது சித்தமே. திருமாலின் அன்பர்கள் சித்தத்தை மாசறத் துடைத்தவர்கள். எவ்வாறு சித்தத்தைத் தூய்மை செய்தார்கள் என்பதையும் காண்போம்.

சித்தத்தை மாசுபடுத்தும் குற்றங்கள் மூன்று. காமம், வெகுளி, மயக்கம் என்பனவாம். திருவள்ளுவரும் இதையே

*''காமம் வெகுளி மயக்கம் இவை மூனறன்*
*நாமம் கெடக் கெடும் நோய்''* *(குறள் 360)*

என்று கூறினார். ஒரு பொருளின் மேல் ஆசை எழுதலும் அந்த ஆசையைப் பெறமுடியாது தடை உண்டாய வழி தடைக்குக் காரணமானவற்றின் மேல் கோபம் உண்டாதலும் ஆசை நிறைவேறியவழி நிலையற்ற இன்பத்தை நிலையானதாகக் கருதி மயங்குதலாகிய மயக்கமும் ஒன்றை ஒன்று தொடர்ந்து வருவனவாகும்.

இதனை வடமொழியில் 'அலிக்கை, அகங்காரம், அவா, விழைவு, வெறுப்பு என்று ஐந்தாகக் காட்டி, 'பஞ்சக் கிலேசம்' என்று பெயர் கொடுப்பர். இவ்ஐந்தும் மூன்றில் அடங்கும். மூன்றும் அவா அல்லது ஆசை என்னும் ஒன்றில் அடங்கும்.

இந்த ஆசைதான் மனத்தை அதாவது சித்தத்தை அழுக்காக்குகிறது. உயிரை இறைவனுக்கு நெருக்கமாக ஆகத் தூய்மைப்படுத்த வேண்டுமானால், உயிருக்கும் உலக ஆசைக்கும் இடையில் உள்ள மனத்தை மாசு அறத் துடைக்க வேண்டும். இதையே பெரியோர்கள் ''மனம் வெளுக்க'', ''மனமது செம்மையானால்'' என்றெல்லாம் சொல்லிப் போந்தார்கள். எவ்வாறு சித்தத்தைத் தூய்மைப்படுத்துவது என்பதைத் தொடர்ந்து காண்போம்.

**(தொடரும்)**

---

ஒரு மனிதனால் சிறிதளவு எடையை கூட வெகுநேரத்திற்குத் தூக்க முடியவில்லை. அப்படியிருக்க, ஆத்மாவானது இவ்வளவு பெரிய சரீரத்தை, பிறந்தது முதல் இறக்கும் வரை தூக்கிகொண்டு இங்கும் அங்கும் அலைவது எவ்வளது விசித்திரம்.

**- ஸ்ரீ ஸ்வாமிஜி**

# பிருந்தாவனமும் நந்தகுமாரனும்

(தொடர்ச்சி)

பிஸிமா ஒவ்வொரு நாளும் யமுனையில் மூன்று முறை நீராடி, கௌர்-நிதாயிக்கு மிகவும் பக்தி-சிரத்தையுடன் ஆராதனை செய்வாள். இவ்வாறு அவள் தனது நூறாவது வயது வரை செய்தாள். அதன் பின்பு அவளால் அவ்வாறு செய்ய முடியவில்லை. அதனால், நித்யானந்தர் வம்சத்தைச் சேர்ந்த ஸ்ரீ பாதகோபேச்வர கோஸ்வாமீ என்ற பக்தரை கௌர்-நிதாயியினுடைய சேவைக்காக நியமித்தாள். அவர் கௌர்-நிதாயியை சக்ய (நண்பன் என்ற) **பா**வத்தில் பூஜித்தார். அதனால், தன்னுடைய **பா**வத்திற்கேற்ப சிரத்தையாக அவர்களை வழிபட விரும்பினார் கோபேச்வரர். ஆனால், அவருக்கு அதில் ஒரு சிரமம் இருந்தது. உருவத்தில் கௌர்-நிதாய் மிகவும் சிறியவர்களாக இருந்தார்கள். குழந்தைகள் போல் இருந்த இவர்களது உருவம் பிஸிமாவின் வாத்ஸல்ய **பா**வத்திற்கு ஏற்றதாக இருந்தபோதிலும் கோபேச்வரருடைய சக்ய **பா**வத்திற்கு ஏற்றதாக இல்லை. ஆகையால், அவர் பிஸிமாவிடம் சென்று, 'இவர்களின் உருவம் என் மனதில் சக்ய **பா**வங்கள் தோன்ற அனுகூலமாக இல்லை. அதனால், என்னால் முழு ஈடுபாடுடன் பூஜை செய்ய முடியவில்லை'' என்று வருந்தினார். பிஸிமா அவர் கவலையை தீர்த்துவிட்டார். கௌர்-நிதாயி யினுடைய முகவாய்கட்டையை பிடித்து சற்றே உயர்த்தினாள் பிஸிமா. உடனேயே அவர்களின் உயரம் கூடிற்று. இப்பொழுது அவர்கள் இளமை பருவத்திலுள்ளவர்கள் போன்று தோன்றினார்கள். இன்றும் பிருந்தாவனத்தில் பனகண்டியில் கௌர்-நிதாய் இப்படி ஒரு ரூபத்தில்தான் காட்சியளிக்கின்றனர்.

வாத்ஸல்ய **பா**வத்தில் பிஸிமாவின் ப்ரேம லாலனைக்குப் பழக்கப்பட்ட கௌர்-நிதாயிக்கு கோபேச்வரருடைய வாத்ஸல்ய **பா**வத்தை ஏற்பதில் சற்று சிரமம் ஏற்பட்டது என்றே கூறவேண்டும். பிஸிமா அவர்களுக்கு பதமான வெந்நீரிலேயே குளிப்பாட்டுவாள்.

கோபேச்வரரோ அவர்களுக்கு பச்சை தண்ணீரில் குளிப்பாட்டி விட்டார். இதன் விளைவாக கௌர்-நிதாயிக்கு ஜலதோஷம் பிடித்துவிட்டது.

தள்ளாமையால் பிஸிமா கோவிலின் முதல் தளத்திலுள்ள ஒரு அறையில்தான் தங்கியிருந்தாள். கீழே இறங்கி வருவது என்பது மிகவும் அரிதாகிவிட்டது. ஆனால், கௌர்-நிதாயிக்கு ஏதாவது கஷ்டம் என்றால் அதை அவள் உடனே உணர்ந்துவிடுவாள். இவ்வாறே அவர்களுக்கு ஜலதோஷம் பிடித்ததையும் அறிந்து அவள் கீழே இறங்கி அவர்களைக் காண வந்தாள். அவர்களின் கண்கள் சிவந்து இருப்பதையும் மூக்கிலிருந்து சளி வழிந்துக் கொண்டிருப்பதையும் கண்டு அவள் இதயம் துடித்துவிட்டது. அவர்களின் திருமேனியை தொட்டுப்பார்த்து ஜுரம் வேறு அடிப்பதைக் கண்டாள். தன்னுடைய புடவை தலைப்பினால் அவர்கள் மூக்கைத் துடைத்தாள். பின்பு கோபேச்வரரை அழைத்து, கண்களில் கண்ணீருடன், ''பார்! என் குழந்தைகளை நீ என்ன செய்துவிட்டாய்! அவர்களை குளிர்ந்த நீரில் நீராட்டி அவர்களுக்கு ஜுரம் வரவழைத்துவிட்டாய்'' என்று தன் புடவை தலைப்பில் உள்ள அவர்களது சளியை காட்டியவாறே கூறினாள். ஆனால், கோபேச்வரருக்கு நம்பிக்கை ஏற்ப்படவில்லை. இதைக் கண்ட பிஸிமா கோபமடைந்தாள். பிஸிமா தன் புடவையின் மற்றொரு முனையை கௌர்-நிதாயியின் மூக்கின் அருகில் வைத்து 'மூக்கை சிந்து' என்றாள். கௌரின் மூக்கிலிருந்து மீண்டும் சளி வெளிவந்தது. அதன் திவ்ய கந்தம் அந்த இடத்தில் பரவியது. கோபேச்வரர் இதைக் கண்டதும் பிஸிமாவின் காலில் விழுந்துவிட்டார்.

பிஸிமாவிற்கு 106 வயது ஆனபோது, அவள் கோபேச்வர் கோஸ்வாமியை அழைத்து தான் இந்த உலகத்தை விட்டு போகும் நாள் எது என்பதைப் பற்றி கூறினாள். அவள் குறிப்பிட்ட நாளிலேயே, அவள் தனது ஸித்த தேஹத்தில் ராதா-க்ருஷ்ணருக்கும் கௌர்-நிதாயிக்கும் நித்யஸேவை செய்ய இந்த தூல உடலைத் துறந்தாள்.

# ஸ்ரீ ஸ்வாமிஜியின் ஸம்பாஷணைகளிலிருந்து - 140

ஒரு அறையில் ஒரு தீபத்தை ஏற்றி வைத்தால் அதன் பிரகாசம் அறை முழுவதும் செல்கிறது. அறையின் வாசலோ, ஜன்னல் கதவுகளோ திறந்து இருப்பின், இந்தப் பிரகாசம் குறைந்து காணப்படும். அறைக் கதவையும், ஜன்னலையும் அடைத்து விட்டால், ஒளியானது வெளியில் செல்லாமல் அறையினுள்ளேயே தங்கிவிடும். அதனால், அறையினுள்ளிருக்கும் ஒளி அதிகமாக இருக்கும். அதுபோலவே, மனதிலிருக்கும் ஆன்மசக்தியானது வெளியில் செல்லாமல், அதை ஒருமுகப்படுத்தி ஆன்ம ஸ்தானத்திலோ, ஈஸ்வர சரணத்திலோ ஒடுக்கி வைத்திருப்பதே ''ப்ரத்யாஹாரம்'' எனப்படும். இந்திரியங்கள் வழியாக மனது வெளியே செல்லுமானால், அது தன் முழு பலத்தை இழக்கும் (இது ஒளி, அறையை விட்டு வெளியே செல்வதை ஒக்கும்). இந்திரியங்கள் ஒருமுகப்படாத மனது, அதிசூக்ஷ்மமாக மாறிவிடும். இதுவே ப்ரத்யாஹாரம்.

இப்படி அதிசூக்ஷ்மமான மனதைக் கொண்டுதான் ஆன்ம விசாரத்திலோ, தியானத்திலோ முன்னேற முடியும். இதை கற்பனையினால் எட்ட முடியாது என்பதை புரிந்துகொள்ள வேண்டும். அனுபவத்தினால் உணர்ந்து கொள்ளக்கூடிய ஒன்றை, கற்பனையும், நூல்களும் தாராது. இப்படி சூக்ஷ்மமான மனதை ஈஸ்வரனின் சரணத்தில் செலுத்தினால் அது சகுண த்யானம். அந்த மனதை ஆன்மஸ்தானத்தில் ஒடுக்குவதோ, ஆன்ம அல்லது ஸ்புரிப்பையே உணர்ந்து இருப்பதோ ஆன்மவிசாரம் ஆகும். இதையே தாரணை என்பர்.

இது நன்கு கைகூடினால் மனது ஆன்மாவில் ஒடுங்கி நிற்கும். இது ஆன்மவிசாரமார்க்கத்தில் ஏற்படும் அனுபவம். ஒருக்கால் சகுண தியானம் செய்து வருவாராயின், அவருக்கு ஈஸ்வரனின் சரணம் மட்டுமே தென்படும். வேறு ஒன்றும் தெரியாது. இது தியானம் சித்தித்த நிலை.

இதற்கு மேற்பட்ட நிலையில், தியானம் செய்யப்படும் வஸ்து, தியானம் என்னும் செயல், தியானம் செய்வோன் ஆகிய

மூன்றும் அற்றுப்போய்விடும். இதுவே சமாதி. இதுவே, ராஜயோகத்தின் லக்ஷியம். ஆன்மவிசாரம் செய்து வந்தாலும் இந்த அனுபூதிதான் கிடைக்கும். ஆகையால், ராஜயோகிகளுக்கும் ஆத்மஸ்தானம் என்பது ஹ்ருதயமே தவிர ஸஹஸ்ராரம் அல்ல.

அத்வைதம் இறுதி நிலை. இரண்டற்றதான இந்நிலைக்கு முன் விசிஷ்டாத்வைத, த்வைத நிலைகள் உண்மை. அதன் அனுபவமும் ஏற்படும். ஆயின் அவையே இறுதி என சொல்லமுடியாது.

அதுபோல், ராஜயோகத்தில், மூலாதாரத்திலிருந்து மேலே சென்று ஸஹஸ்ராரம் வரை ப்ராணசக்தி அடைந்தாலும், அது இறுதி ஆகாது. சென்னையிலிருந்து மாயவரம் செல்லும்பொழுது சிதம்பரம் வருவது இயற்கைதானே! அதுபோல், ஹ்ருதயத்தில் ஆன்மஸ்தான அனுபவம் ஏற்படும் முன் ஸஹஸ்ராரத்திற்கு ப்ராணன் மூலாதாரத்தில் இருந்து கிளம்பி சென்று அடைகிறது என்பது ராஜயோகத்தில் ஏற்படக்கூடிய ஒரு உயர்ந்த அனுபவமே அன்றி, இறுதி நிலை அல்ல.

சித்த புருஷர்களின் சாதனை என்பது வேறு. அவர்கள் சுழுமுனை நாட்டம் எனும் சாதனையை பயில்கின்றனர். உள்நாக்குக்கு மேல் புருவமத்தியில் ஒரு ஜோதி எரிகிறது. அதை தரிசனம் செய்வதே அவர்கள் லக்ஷியம். இது இறுதி நிலை அல்ல. அனைத்து சித்தர்களும் ஞானிகள் என்று கூறவும் முடியாது.

**(தொடரும்)**

***Sri Hari :***

***Pranams to the Lotus feet of***

**HIS HOLINESS SRI SRI MURALIDHARA SWAMIJI**

**M/s. BUDDIES INFOTECH PRIVATE LIMITED**

*Web Designing and Application Development*

Old No. 22, New No. 34, Sriman Srinivasa Road,
Alwarpet, Chennai - 600 018.
Phone No. 044-421 44 662
e-mail : contact@buddiesinfotech.com

# செய்திகள்

**நவம்பர் 3-ஆம் தேதி, 4-ஆம் தேதிகள்**

கடலூர், மஞ்சக்குப்பம், நேதாஜி சாலை, டவுன் ஹாலில் சைதன்ய மஹாபிரபு நாமபிக்ஷா கேந்திரா - கடலூர் கிளை சார்பில் ''ஹரே ராம...'' மஹாமந்திர நாமகீர்த்தன கூட்டுப்பிரார்த்தனை ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்கள் முன்னிலையில் மாலை 6.30 மணி முதல் இரவு 8.30 மணி வரை நடைபெற்றது. முன்னதாக, எண்ணற்ற பக்தர்கள் மஹாமந்திரத்தினால் தங்களுக்கு ஏற்பட்ட நன்மைகளை மகிழ்ச்சியுடன் கூறினார்கள்.

**நவம்பர் 11-ஆம் தேதி முதல் 18-ஆம் தேதி வரை**

ஸ்ரீ சாந்தீபனி குருகுலம் - AP, Hyderabad இரண்டாம் ஆண்டு நிறைவு விழா ஒட்டியும், ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்களின் ஜயந்தியை ஒட்டியும் Secunderabad, Keyes High School மைதானத்தில் ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்களின் ஸ்ரீமத் பாகவதம் அருளுரை நடைபெற்றது. தினமும் சுமார் 1000 பேர் இதில் கலந்து கொண்டனர்.

ஸ்ரீ ராமர் கோவிலுக்கு விஜயம் செய்து அருளுரை ஆற்றினார்கள். 16-11-07 அன்று ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்கள் ஹைதராபாத் ஜுபிளி ஹில்ஸ், பாரதீய வித்யா பவன் பள்ளிக்கு விஜயம் செய்து தமிழிலும் ஆங்கிலத்திலும் அருளுரையாற்றினார்கள். பால பள்ளிகளுக்குச் சென்று குழந்தைகளுக்கு அருளாசி வழங்கினார்கள். 18-ஆம் தேதியன்று மாதாபூர் சென்று பள்ளிக் குழந்தைகளுக்கு பரிசளித்தார்கள்.

உஞ்சிவிருத்தி பஜனையில் ஸ்ரீ ஸ்வாமிஜி கலந்துகொண்டார்கள். திரு. கோபாலகிருஷ்ணன், தலைவர், பாரதீய வித்யா பவன் ஹைதராபாத் கேந்திராக்கள், திரு. பாலாஜி ஹரிஹரன், திரு. கல்யாணராமன், சைதன்ய மஹாப்ரபு நாமபிக்ஷா கேந்திரா ஹைதராபாத் கிளையைச் சேர்ந்த திருமதி லதா ரவிச்சந்திரன் - திரு. ரவிச்சந்திரன் தம்பதியினர் மற்றும் பல பக்தர்கள் நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளைச் சிறப்பாக செய்திருந்தனர்.

**நவம்பர் 17-ஆம் தேதி**

ஆஸ்திரேலியா சிட்னியில் மஹாமந்திர கூட்டுப்பிரார்த்தனை Pennant Hills Community Centreல் மாலை 4 மணி முதல் 5 மணி வரை நடைபெற்றது.

**நவம்பர் 18-ஆம் தேதி முதல் 25-ஆம் தேதி வரை**

''மஹிளா பாகவத ஸப்தாஹ ஸதக்ரது'' பெங்களுர் மல்லேஸ்வரத்தில் உள்ள கானரா யூனியன் கல்யாண மண்டபத்தில் நடைபெற்றது. ஸ்ரீமதி கீதா

ரமணி, ஸ்ரீமதி சாந்தா விஸ்வநாதன், ஸ்ரீமதி மங்களம் ராமஸ்வாமி மற்றும் மஹிளா மண்டலியைச் சேர்ந்த 130 பேர் கலந்துகொண்டனர்.

காலையில் பாகவத பாராயணம், மாலையில் பாகவத உபன்யாஸம், மற்றும் கலை நிகழ்ச்சிகள், திவ்யநாம கீர்த்தனம், டோலோத்ஸவம் நடைப்பெற்றது. மஹிளா மண்டலியைச் சேர்ந்த பலரும் உதவி செய்து விழாவை மென்மேலும் பரிமளிக்க செய்தனர்.

அஷ்டபதி பஜனையும், இரவு திவ்யநாமும் நடைப்பெற்றது. உஞ்சவிருத்தி, ராதா கல்யாண வைபவம் வெகு சிறப்பாக நடந்தேறியது. ஸ்ரீ ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்கள் இதில் கலந்து கொண்டார்கள்.

நவம்பர் 24-ஆம் தேதியன்று ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்கள், ஸ்ரீ ராமக்ருஷ்ண பஜனை சபா சார்பில் வெளியிடப்பட்ட ''நாமாம்ருதம்'' பஜனை கேசட்டுகள், சி.டி.களை வெளியிட்டு அருளுரை வழங்கினார்கள்.

**நவம்பர் 19-ஆம் தேதி முதல் 21-ஆம் தேதி வரை**

கார்த்திகை ஏகாதசி வைபவத்தை முன்னிட்டு, விட்டலாபுரம், ஸ்ரீ பிரேமிகவிட்டலார் ஸ்வாமி திருக்கோயிலில், ''அபங்க பஜனை மேளா'' நடைபெற்றது. இதில் எண்ணற்ற பாகவதர்கள் கலந்து கொண்டனர். ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்கள், இதில் கலந்து கொண்டார்கள்.

**நவம்பர் 24-ஆம் தேதி**

ஸ்ரீவனத்தில், பரனூர் மஹாத்மா ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ க்ருஷ்ணப்ரேமி ஸ்வாமிகள் அவர்கள் முன்னிலையில் சாமவேதபாடசாலை மஹாத்மா மற்றும் 'கோவர்த்தன்' பஜனை மடம் கட்டுமான பணிக்கான பூமி பூஜை நடைபெற்றது. இதற்கான பொறுப்புக்களை, யுகள சேவா டிரஸ்ட் டிரஸ்டிகள் திரு. சந்திரமௌலி, திருமதி ஷோபனா சந்திரமௌலி ஏற்று செய்து வருகின்றார்கள்.

**நவம்பர் 30-ஆம் தேதி**

திருவண்ணாமலை பகவான் யோகி ராம்சுரத்குமார் ஆஸ்ரமத்தில் நடைபெற்ற பகவான் யோகிராம்சுரத்குமார் மகராஜின் 89-வது ஜெயந்தி விழாவில் ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்கள் கலந்து கொண்டு, 48 நாட்கள் தொடர்ச்சியாக நடைபெற்ற ''யோகிராம் சுரத்குமார்... ஜெயகுருராயா'' நாமயக்ஞத்தினை நிறைவு செய்து அருளுரை வழங்கினார்கள்.

**டிசம்பர் 1-ஆம் தேதி**

வேலூர் மாவட்டம், பேரணாம்பட்டு ஒன்றியம் ஆம்பூர் அடுத்த மேல்கொத்தகுப்பம் , ஸ்ரீ லக்ஷ்மி நாராயண ஸ்வாமி ஆலய வளாகத்தில் ஸ்ரீ ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்கள் அருளுரை நிகழ்த்தினர்கள். பின்னர், அருள்மிகு கெங்கையம்மன் ஆலயத்திற்கு விஜயம் செய்தார்கள்.

**டிசம்பர் 1, 2 தேதிகள்**

ஆம்பூர் ஆன்மீகப் பேரவை மற்றும் சைதன்ய மஹாபிரபு நாமபிக்ஷா கேந்திரா சார்பில், ஆம்பூர் அருள்மிகு சீனிவாச பெருமாள் ஆலயத்தில் ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்களின் அருளுரை நடைப்பெற்றது.

திருமதி கிரிஜா அசோக் தலைமையில் சுமார் 25 பெண் குழந்தைகள் ஸ்ரீ ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்கள் இயற்றிய தமிழ் கீர்த்தனைகளைப் பாடினார்கள்.

**டிசம்பர் 2-ஆம் தேதி**

பேர்ணாம்பட்டு ஒன்றியம் ஆம்பூர் அடுத்த துத்திப்பட்டு கிராமத்தில் உள்ள மிகவும் பழமையும், புகழும் வாய்ந்த குமுதவல்லி தாயார் ஸ்ரீமேத ஸ்ரீ பிந்துமாதவ வரதராஜ பெருமாள் திருக்கோயிலுக்கு ஸ்ரீ ஸ்வாமிஜி விஜயம் செய்தார்கள்.

**டிசம்பர் 3-ஆம் தேதி**

ஆம்பூர் ஆன்மீக பேரவை சார்பில் ஆம்பூர் ஷராப் பஜார் வீதியில் அமைந்துள்ள ஸ்ரீ வாசவி திருமண மண்டபத்தில் ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்களால் பிரார்த்தனை நடைபெற்றது. சுமார் ஆயிரம் பக்தர்கள் கலந்துகொண்டனர். அனைவருக்கு பிரசாதம் வழங்கப்பட்டது.

**டிசம்பர் 9-ஆம் தேதி**

ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்கள் முன்னிலையில் ''ஹரே ராம...'' மஹாமந்திர நாமகீர்த்தன கூட்டுப் பிரார்த்தனை, சைதன்ய மஹாப்ரபு நாமபிக்ஷா கேந்திரா-மஹிளா மண்டலி-தஞ்சாவூர் கிளை சார்பில் தஞ்சாவூர், மருத்துவக் கல்லூரி சாலை, அண்ணாமலை கல்யாண மண்டபத்தில் நடைபெற்றது. 1000க்கும் மேற்பட்டவர்கள் இதில் கலந்துகொண்டனர்.

**டிசம்பர் 14-ஆம் தேதி**

பழைய வாணியம்பாடி ஸ்ரீ லட்சுமிநாராயணன் கைங்கரிய சபா சார்பில் திருப்பத்தூர் தாலுக்கா, ஆதியூர் கிராமம், ஸ்ரீ லட்சுமி நாராயண பெருமாள் திருக்கோயிலில் நடைபெற்ற மஹா ஸம்ப்ரோக்ஷண வைபவங்களில் ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்கள் கலந்துகொண்டு அருளுரை வழங்கினார்கள்.

**டிசம்பர் 17-ஆம் தேதி முதல்**

சென்னை பிரேமிகபவனத்திலும், மஹாரண்யம் ஸ்ரீ கல்யாண ஸ்ரீநிவாஸ பெருமாள் ஸந்நிதியிலும், தனுர்மாத பூஜை நடைபெற்றுக் கொண்டு வருகின்றது.

**டிசம்பர் 20-ஆம் தேதி - வைகுண்ட ஏகாதசி**

சென்னை பிரேமிகபவனத்தில், ஸ்ரீ ஸ்ரீநிவாஸ பெருமாளுக்கு விசேஷ திருமஞ்சனம் நடைபெற்றது. மதுரபுரி பாகவதபவனத்தில் ஸ்ரீ மாதுரீஸகீ ஸமேத ஸ்ரீ பிரேமிகவரதனுக்கு திருமஞ்சனம் நடைபெற்றது. இரவு அகண்ட நாமகீர்த்தனம், மதுரபுரியிலும், சென்னை பிரேமிகபவனத்திலும் நடைபெற்றது.

**டிசம்பர் 21-ஆம் தேதி முதல் டிசம்பர் 30-ஆம் தேதி வரை**

சென்னை பிரேமிகபவனத்தில், அத்யயன உத்ஸவம் நடைபெற்றது.

**டிசம்பர் 22-ஆம் தேதி முதல் டிசம்பர் 28-ஆம் தேதி வரை**

சைதன்ய மஹாபிரபு நாமபிக்ஷா கேந்திரா சார்பில் சென்னை, அசோக் நகர், மஹோதயா ஹால், ஸ்த்ரீ சேவா மந்திரில், தெய்வத் தமிழ் இசை விழா கொண்டாடப்பட்டது.

தி சென்னை சில்க், ஜுவல்லரி மஹால் இயக்குனர் திரு. P.K. ஆறுமுகம் அவர்கள் முன்னிலையில், திருவண்ணாமலை பகவான் யோகி ராம்சுரத்குமார் ஆஸ்ரம நிர்வாக அறங்காவலர் ஜஸ்டிஸ் T.S. அருணாசலம் அவர்கள் தலைமையேற்று குத்து விளக்கேற்றி விழாவினை துவக்கி வைத்துப் பேசினார்கள். திரு. D. தீனதயாளன் அவர்கள் நன்றியுரை நவின்றார்கள்.

இவ்விழாவில், பிரபல கலைஞர்களின் நாதஸ்வரம், வாய்ப்பாட்டு, பரதநாட்டியம், வில்லுப்பாட்டு நடைபெற்றது. திருமுறை, தேவாரம், திருவாசகம் திவ்யபிரபந்தம், திருப்புகழ் மற்றும் தமிழ் பாடல்கள் என்று தமிழிலேயே நடைபெற்ற இந்த இசைவிழா சென்னை வாழ் மக்களை பெரிதும் கவர்ந்தது.

**டிசம்பர் 22, 23 தேதிகள்**

சைதன்ய மஹாபிரபு நாமபிக்ஷா கேந்திரா, ஆவடி கிளை மற்றும் கோவூர் முரளீதரதாஸ் சத்சங்கம் சார்பில் காலை 6.30 முதல் மாலை 6.30 வரை அகண்ட நாமகீர்த்தனம் நடைபெற்றது.

**டிசம்பர் 23-ஆம் தேதி முதல் 29-ஆம் தேதி வரை**

குருவாயூரில் நடைபெற்ற ஸ்ரீமத் பாகவத ஸப்தாஹத்தில் ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்கள் கலந்துகொண்டார்கள்.

**மங்களானி பவந்து**